பல்லாவரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ரூ. 92 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஸ்மார்ட் வகுப்பறைகளை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தார்கள். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டலக்குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் உள்ளனர்.

பல்லாவரம் வடக்கு பகுதி கழக துணைச் செயலாளர் ச. சிவக்குமார் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் லதா சிவக்குமார் ஆகியோரின் மகள் திருமண வரவேற்பு விழா மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர் டி. ஆர். பாலு எம்.பி. அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன் அமைச்சர்கள் கே.ஆர். பெரிய கருப்பன், கோ.வி. செழியன், டாக்டர் ஜெகத்ரட்சகன், பாடநூல் நிறுவன தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, தீர்மானம் கழக தீர்மான குழு செயலாளர் மீ. ஆ. வைத்தியலிங்கம், மாநகரச் செயலாளர் எஸ். ஆர். ராஜா எம்.எல்.ஏ, தாம்பரம் மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், மண்டல தலைவர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, வே. கருணாநிதி, ஆலந்தூர் சந்திரன், பகுதி கழகச் செயலாளர்கள் த. ஜெயக்குமார், ஆலந்தூர் ப. குணாளன், இ.எஸ். பெர்னார்ட், ஏ.கே. கருணாகரன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்கள்.

சேலம் கோட்ட வணிகவரித்துறை

அலுவலர்களுக்கான பணி திறனாய்வுக் கூட்டம்!

அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் நடைபெற்றது!

சென்னை,செப்.20-

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அவர்கள் தலைமையில் சேலம் கோட்ட வணிகவரித்துறை அலுவலர்களுக்கான பணி திறனாய்வுக் கூட்டம் சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (19.09.2025) நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பின்னர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் சேவைகள் பொதுமக்களுக்கு எளிதாக கிடைத்திடும் வகையில் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக கடந்த 2021 ஆம் ஆண்டை காட்டிலும் தற்பொழுது 2025 ஆம் ஆண்டிற்கான வணிகவரி வருவாய் பலமடங்கு அதிகரித்துள்ளது.

அரசுக்கான வருவாய் நிதி ஆதாரமாக வணிக வரி மற்றும் பதிவுத்துறை விளங்குகிறது. மேலும், அரசுக்கு கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் பல்வேறு ஆலோசனைகள் தொடர்ச்சியாக அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், இன்றையதினம் சேலம் I, II, நாமக்கல் ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த வணிகவரித்துறை அலுவலர்களுக்கான 202526 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையிலான பணித்திறனாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. வணிகவரித்துறையின் நிதி ஆதாரத்தை பெருக்கிடும் நடவடிக்கையாக அனைத்து வணிகவரி கோட்டங்களுக்கும் தொடர்ச்சியான ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

தற்பொழுது மாறுதலுக்குட்பட்ட ஒன்றிய அரசின் சரக்கு மற்றும் சேவை வரி, ஏற்றுமதி இறக்குமதி வரி உள்ளிட்ட அனைத்து இனங்களிலும் தற்போது நிலவிவரும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு மாநில அரசின் வருவாயை உயர்த்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் பங்கேற்றுள்ள அலுவலர்களின் கருத்துக்களும் கேட்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசுச் செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், வணிகவரி ஆணையர் எஸ். நாகராஜன், கூடுதல் ஆணையர்கள் பரமேஸ்வரன் (வருவாய் வசூல் மற்றும் மேற்பார்வை), திருமதி ரமாதேவி (தணிக்கை), ஞான குமார் (நுண்ணறிவு), மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், வணிகவரித்துறை இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் உள்ளிட்ட வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 212 வது நாள்!

அம்பத்தூர் வடக்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,செப்.20-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 212 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (19.09.2025), அம்பத்தூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 85 சிவானந்த நகர்

2) வட்டம் 86அ, அத்திப்பட்டு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ் நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ் நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, எஸ். பி. ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், பி. கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர். ஜி சாந்தகுமாரி எம்.சி, எல். பி.எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி. அம்பத்தூர் வடக்கு/தெற்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர். டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

கடலூர் நகரின் என்.எல்.சி. இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் கீழ்

ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட டவுன் ஹால்!

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் திறக்கப்பட்டது!

கடலூர், செப்.20

கடலூரின் புகழ்பெற்ற டவுன்ஹால், என்எல்சி இந்தியா லிமிடெட் (NLCIL) நிறுவனத்தால் அதன் பெருநிறுவன சமூக பொருப்புணர்வு திட்டமான (CSR) நிதியின் கீழ் ரூ.3.30 கோடி செலவில் முழுமையாக புனரமைக்கப்பட்டது.

செப்டம்பர் 18, 2025, கடலூரில் நடைபெற்ற இந்த விழாவிற்கு தமிழ்நாடு அரசின் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமை வகித்தார்.

அவருடன், கடலூர் மக்களவை உறுப்பினர் விஷ்ணு பிரசாத், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி அதித்யா செந்தில் குமார், ஐ.ஏ.எஸ்., என்எல்சிஐஎல் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் பிரசன்ன குமார் மோட்டுப் பள்ளி, சுரங்க செயல் இயக்குநர் ஐ.எஸ். ஜாஸ்பர் ரோஸ் மற்றும் என்எல்சிஐஎல்ன் மூத்த அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் “விக்சித் பாரத்” நோக்கத்தின் அடிப்படையில், மற்றும் நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை மத்திய அமைச்சர் கிஷன் ரெட்டி மற்றும் மத்திய இணை அமைச்சர் சதீஷ் சந்திர துபே ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், என்எல்சிஐஎல் நிறுவனம் கடலூர் மாவட்டத்திற்கு 3.30 கோடி நிதியுதவியை வழங்கியது.

இந்த நிதியின் மூலம், பாரம்பரியம் மாறாமல், டவுன்ஹாலின் முழுமையான புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

வரலாற்று பாரம்பரியம் மிக்க கடலூர் டவுன்ஹால், பல தசாப்தங்களாக சமூக மற்றும் பண்பாட்டு நிகழ்வுகளுக்கு முக்கிய இடமாக இருந்தது. அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, என்எல்சிஐஎல் நிறுவனம் இதனை தனது முக்கிய CSR திட்டமாக எடுத்துக் கொண்டு, கட்டிடத்தின் மரபை காப்பதோடு, நவீன வசதிகளுடன் புனரமைத்தது. தற்போது, இது சமூக, பண்பாட்டு மற்றும் பொது நிகழ்வுகளுக்கு ஒரு சிறந்த மையமாக தயாராகியுள்ளது.

இந்நிகழ்வின் போது, என்எல்சிஐஎல் நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் பிரசன்ன குமார் மோட்டுப் பள்ளி அவர்கள் கூறியதாவது:

“என்எல்சிஐஎல் நிறுவனம் கடலூர் மாவட்ட வளர்ச்சிக்கு எப்போதும் முன்னுரிமை அளிக்கிறது. எங்களது சி.எஸ்.ஆர். நிதியின் சுமார் 70 சதவிகிதம் இந்த மாவட்டத்திற்கே செலவிடப்படுகிறது. இதுவரை ரூ.380 கோடி மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம். மேலும் 46 கோடி மதிப்பிலான திட்டங்கள் இப்போது நடைபெற்று வருகின்றன. டவுன் ஹால் என்பது ஒரு கட்டிடம் மட்டுமல்ல — அது ஒரு பாரம்பரியச் செல்வமாகும். அதன் புனரமைப்பில் பங்கெடுத்தது எங்களை பெருமைப்பட வைக்கிறது.”

2014 முதல் தொடர்ந்து, கடலூர் மாவட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்கத்தில் என்எல்சிஐஎல் நிறுவனம் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. மொத்தம் ரூ.380 கோடி மதிப்பில் கல்வி, சுகாதாரம், கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சமூக நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக, தண்ணீர் வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், வள்ளலார் ஏரி, செங்கல் ஓடை, மத்திய பரவாணர் உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட நீர் நிலைகள் புனரமைக்கப்பட்டுள்ளன. இதற்காக மட்டும் 70 கோடி செலவிடப்பட்டுள்ளது.

கடலூர் டவுன்ஹாலின் இப்புதிய உருவாக்கம், என்எல்சிஐஎல் நிறுவனம் இந்த மாவட்டத்தின் பண்பாட்டு பாரம்பரியம் மற்றும் நிலையான வளர்ச்சிக்கு அர்ப்பணித்திருக்கும் உறுதியை பிரதிபலிக்கிறது.

தாம்பரம் தொகுதிக்கு உட்பட்ட முடிச்சூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர் ராஜா கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் உடன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தாமோதரன்,சுஜாதா,மேகநாதன், வெங்கட்ராமன், லோகநாதன்,மணிகண்டன்,சுனில்மேத்யூ,குமுதினி, ராஜமாணிக்கம் மற்றும் அரசு அதிகாரிகள், பொதுநல சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சேலம் மேற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றம்!

2026 சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் வென்றிட உறுதியேற்போம்!

மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. சிறப்புரை!

சேலம், செப். 20 –

சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம், 12.09.2025ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி அளவில் எடப்பாடியில் உள்ள ஸ்ரீ நடராஜா திருமண மண்டபத்தில் சேலம் மேற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் ப.தங்கமுத்து தலைமையில், முன்னாள் அமைச்சர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினரும், சேலம் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி சிறப்புரை யில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் சேலம் மேற்கு மாவட்ட கழக செயற்குழு உறுப்பினர்களால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சபரீசன் தந்தை வேதமூர்த்தி அவர்களின் மறைவிற்கு இரங்கல் தீர்மானம்!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சம்பந்தியும், மரியாதைக்குரிய சபரீசன் தந்தையுமான வேதமூர்த்தி அவர்களின் மறைவு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். அன்னாரது மறைவிற்கு சேலம் மேற்கு மாவட்ட கழகம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

கழகத்தலைவர் வெளிநாட்டு பயண வெற்றிக்கு வாழ்த்துகளும், பாராட்டுகளும்!

முதல்வர் அவர்கள் கழகத்தலைவராக பொறுப்பேற்று வெற்றிகரமாக ஏழு ஆண்டுகளை நிறைவு செய்து எட்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றார்கள். முதல்வராக பொறுப்பேற்று 4 ஆ ஆண்டுகளாக ஆட்சியில் செயற்கரிய மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை தீட்டி திராவிட மாடல் ஆட்சி நடத்தி இந்திய ஒன்றியத்திற்கு வழிகாட்டியாக விளங்குகிறார்கள். கழகத்தலைவர் அவர்கள் முதல்வராக 2021ஆம் ஆண்டு முதல் கடந்த ஆண்டுவரை 922 புரிந்து ணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 10.63 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வெளிநாட்டு முதலீடுகள் பெற்று தந்து அதன் மூலம் 32.81 இலட்சம் தமிழ் மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தந்தவர். ஒரு வார அரசுமுறை பயணமாக ஜெர்மன் மற்றும் இங்கிலாந்து சென்று 15,516 கோடி முதலீட்டை பெற்று அதன் மூலம் 17613 நபர்களுக்கு வேலை வாய்ப்பை உறுதி செய்தவர். தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இது வரை 10,78,516 கோடி அந்நிய முதலீட்டை பெற்று 32 இலட்சம் தமிழ்நாடு மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கியுள்ளார்கள். தமிழ் மண், மானம் காத்திட அயராது உழைத்து வெகுவாக அந்நிய முதலீட்டை ஈட்டி தாயகம் திரும்பிய முதர்வர் அவர்களுக்கு சேலம் மேற்கு மாவட்ட செயற்குழு தனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலம் வருவது குறித்து

இளைஞர்களின் எழுச்சி நாயகன், எதிர்கால தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், கடந்த 2021 சட்டமன்ற தேர்தல் மற்றும் 2024ல் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் கழகம் வெற்றி பெற அயராது உழைத்த தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 2026ல் கழகம் 2.0 வெற்றிப்பெற்று மீண்டும் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைத்திட தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுபயணம் தொடங்கிவிட்டார். துணை முதல்வர் அவர்கள் வருகின்ற செப்டம்பர் 16ந் தேதி அரசு நிகழ்ச்சிக்காக மாங்கனி நகரமாம் சேலத்திற்கு வருகை தர உள்ளார். செப்டம்பர் 16ந் தேதி சேலம் வருகை தரும் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு சேலம் மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக சிறப்பான வரவேற்பு அளிப்பதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

கழக ஆக்கப்பணிகள்!

கழகத்தலைவர், முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்று தனது கழன உழைப்பால் அறிவார்ந்த திட்டங்களை தீட்டி செயல்படுத்தி தமிழ் நாட்டை இந்திய ஒன்றியத்திலுள்ள மாநிலங்களில் வளர்ச்சி மிக்க முதல் மாநிலமாக உயர்த்தியுள்ளார்கள்.

திட்டங்களை செயல்படுத்தி இத்தகைய மக்கள் நலத்திட்டங்கள் சென்றடையாத குடும்பங்களே தமிழ்நாட்டில் இல்லை என்ற அளவுக்கு திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வருகிறார். இத்தகைய திட்டங்கள் தொடர தமிழர் தம் மண், மொழி, மானம் காத்திட வருகின்ற 2026ல் நடைபெற உள்ள **தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் 200க்கும் மேற்பட்ட சட்டமன்றத் தொகுதிகளை வென்றிட** நமது சேலம் மேற்கு மாவட்டத்திலுள்ள சங்ககிரி, எடப்பாடி, மேட்டூர் சட்டமன்ற தொகுதிகளில் அதிக வாக்குகள் பெற்று கழகம் வெற்றிபெற்று அந்த வெற்றிக்கனியை நாம் அனைவரும் கழக தலைவர் தளபதியார் மற்றும் தமிழ்நாடு துணை முதல்வர் ஆகியோரது பொற்கரங்களில் ஒப்படைக்க உழைப்போம் என உறுதியேற்போம் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாதவரம் வடக்கு பகுதி 16 வது வட்டம் பாகம் எண் 9 மணலி புது நகரில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாட்டை தலைகுனியே விடமாட்டேன் உறுதிமொழி ஏற்பு வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் தலைமையில், பாக முகவர் நித்தியானந்தம், வட்ட நிர்வாகிகள் கே. ஏ. ரமேஷ், குமரவேல், மணலி புதுநகர் சி.எம். ராஜா, செமின் எடிசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து உறுதிமொழியை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் வழக்கறிஞர் இளமுருகு, செபின் எடிசன், ரூப்குமார், விசுவநாதன், விஜய், மகாலட்சுமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.